Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

09.11.2020 திங்கட்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## புதினம் தெரியுமோ?

முதல் நாள் கூட்டத்துக்கு அவை போனதுக்கு வெளி நாட்டில இருந்து கனபேர் போன் எடுத்து 2 பேருக்கும் நல்ல கிழியாம். அதை விட பேஸ்புக், ருவிட்டர் எண்டு சமூக வலைத்தளங்களி லையும் கடும் நக்கல். அதோட முந்தி இப்பிடி.அரச தரப்பு நடத்துற கூட்டங் களுக்கு கூட்டமைப் புக்காரர் போனால், 2

# நான்காம் கட்டம் பேராபத்து நிலை

சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வாழுமாறு சுகாதார அமைச்சு ஆலோசனை



கொழும்பு, நவம்பர். 9

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் நான்காவது கட்டத்துக்குள் சென்று விட்டால் அதனைக் கட்டுப்படுத்தமுடியாத நிலை ஏற்படும். எனவே, அனைவரும் பொறுப்புடனும், பொதுநலன்கருதியும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் வாழவேண்டும்' என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஜயருவன் பண்டார இன்று தெரிவித்தார். 2

கொரோனாவுக்கு அஞ்சி

## தவறான முடிவெடுத்து இறப்பு!

கொழும்பு, நவ. 9

கொரோனாத் தொற்றால் இறப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் நபரொருவர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார். அகலவத்தையை சேர்ந்த 56 வயதான பி.வீ. சரதியல் 2



## தீப்பற்றியது இரும்பகம்

பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் எரியுண்டன!

வவுனியா, நவ. 9

வவுனியா செட்டிக்குளத்தில் இரும்பகமொன்று தீப்பற்றி எரிந்துள்ளது. இந்த இடரால் அங்கு வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் 2

## நவ.23ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பம்!

கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ. 9

கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளை மீளத் திறப்பதை மேலும் இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்று தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதுதொடர்பில் கருத்து 2A



மாஸ்க்கை மறந்த

## வடக்கு ஆளுநர்

வவுனியா, நவ. 9

வவுனியாவில் நேற்று நடைபெற்ற அபிவிருத்தித் திட்டக் கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சார்ள்ஸ் மாஸ்க் அணியாமல் கலந்து கொண்டமை பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச அவர்களின் எண்ணக்கருவுக்கமைய ஜனாதிபதி செயலணியின் ஒப்புதலின் கீழ் பிரதமர் அலுவலகத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் 'கிராமிய பொருளாதா 2

## ஹக்கீம், ரிஷாட் டபிள் கேம் தனிமைப்படவேண்டி நேரும்!

ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, நவ.9

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களுக்கு எதிராக ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் நடவடிக்கை எடுக்காவிடின் அவர்களுடன் இணைந்து பயணிக்கமுடியாத நிலை 2

## மீண்டும் சூடுபிடிக்கின்றது அரசியல் கைதிகள் விவகாரம்

சொல்கின்றார் மனோ

கொழும்பு, நவ. 9

அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கின்றது என்று முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ் 2

## கோத்தாபய- ஜி ஜின்பிங் "சூம்" வழியாக சந்திப்பு?



கொழும்பு, நவ.9

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் "சூம்" ஊடான இணையவழி கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்தக் கலந்துரையா 2A

## கிராம அலுவலர் மீதான சந்தேகமே அவரைக் கொல்வதற்குக் காரணம்!

பிரதான சந்தேகநபர் சாட்சியம்

மன்னார், நவ. 9

மாந்தை மேற்கு பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் மீது கொண்ட சந்தேகம்தான் அவரைக் கொலை செய்வதற்குக் காரணம் என்று கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார். அத்துடன், சந்தேக நபருக்கு எதிராக அவருடன் சம்பவ இடத்தில் நின்ற இளைஞன் அரச சாட்சி 2



# நான்காம்....

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

'கொரோனா வைரஸ் தாக்கத்தின் 3ஆவது மட்டத் திலேயே இலங்கை தற்போது இருக்கின்றது. அதாவது வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் 4ஆவது கட்டத்துக்கு சென்றுவிட்டால் எல்லாம் கைமீறி சென்றுவிடும். உலக சுகாதார அமைப்பு 7 கட்டங்களை பட்டியலிட்டுள்ளது, இருந்தாலும் 4ஆவது கட்டத்துக்கு வந்துவிட்டாலே பெரும் சவால்தான்.

எனவே, முகக்கவசம் அணிதல், சமூக இடை வெளி (இரண்டு மீற்றர்), கைகளை கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றவேண்டும். 4ஆவது கட்டத்துக்கு செல் லாமல் இருப்பதற்கு வேறு மந்திரங்கள் எதுவும் இல்லை. மேற்படி நடைமுறைகளையே பின்பற்றவேண்டும். அத்துடன், களியாட்டம் உட் பட சட்டத்தால் தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ள விடயங்களில் பங்கேற்பதை யும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தற்போது கொரோனாவுடன் வாழத் தொடங்கிவிட்டன. இத்தாலி கிறிஸ்மஸ் பண்டிகைக்குக்கூட தயாரா கின்றது. நாமும் சுகாதார பழக்கவழக்கங்களுடன் முன்னோக்கிப் பயணிக்கவேண்டும்.

அதேவேளை, வீடுகளில் உயிரிழக்கும் சம்பவங் கள் பதிவாகியுள்ளன. உரிய வகையில் மருந்து களை எடுக்காமையும் இதற்கு காரணமாக இருக்க லாம். எனவே, உரிய தரப்புகளுக்கு அறிவித்து மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். வைத்திய சாலைக்கு வருவதற்கு அச்சம் கொள்ளவேண் டாம். சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வாருங்கள். சிகிச்சையளிப்பதற்கு மருத்துவமனைக் கட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது' என்றார். (ம-44)

## புதினம் தெரியுமோ

உடன முதல் வேலையா அதை இணக்க அரசியல் எண்டு சொல்லி,கழுவி ஊத்தின ஆக்கள் தான் இந்த ரண்டு பேரும். முந்தி அப்பிடிச் சொல்லிப்போட்டு இப்ப அதேவழியில தாங்களும் போக வெளிக்கிட்டினம்.. சனம். இந்தமுறை சைக்கிளுக்கு வாக்குப் போட்டதே , கூட்டமைப்பின்ர சில ஆக்களை யும், சில போக்குகளையும் பிடிக்காமல் தான். முந்தி அதுகளை எல்லாம் அடிச்சு, துவைச்சிட்டு இப்ப எம்.பி ஆகினவிடன எம்பிக் குதிச்சுக் கொண்டு அரசாங்கத்தின்ர கூட்டங்களுக்கு அதுவும் கொரோனா அபாயம் உள்ள நிலையில போய்க் குந்தி யிருக்கினம் கஜா ப்ரதர்ஸ். அதுக்கு விழுந்த கிழியிலதான் நேற்று இரண்டு பேரும் போகாமல் இருந்தவையாம். பதவி எண்டுறது தனிய பஞ்சு மெத்தை இல்லை. முள்ளு மெத்தை எண்டதை வாயால வடை சுடுற கஜா க்ரூப் தெரிஞ்சு கொண்டால் சரி.

-பட்சி

## தவறான...

என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவர் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சாரதி அண்மையில் நாகொட மருத்துவமனையின் பணியாளர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸை செலுத்தியுள் ளார். இதனையடுத்து, கொரோனாத் தொற்று தனக்கு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில் இருந்தார் என்று சொல்லப்படுகின்றது.

இது குறித்து அவரது மனைவி தெரிவித்ததாவது:

'காலை எழுந்து வீட்டில் தேடிப் பார்த்தேன் அவரைக் காணவில்லை. பின்னர் நண்பர் ஒருவருக்கு அழைப்பு எடுத்து கேட்டேன். எந்த நேரமும் கொரோனா பற்றியே பேசிக் கொண் டிருப்பார், பஸ் சாரதிகளுக்கு தொற்று ஏற்பட்டமையினால் பயந்திருந்தார். நாளை பணிக்கு செல்ல முடியாது என்றார். மத்துகம விலிருந்து நாகொட மருத்துவம னைக்கு சுகாதாரப் பணியாளர்களை அண்மையில் ஏற்றிச் சென்றார், அதில் ஒருவருக்கு கொரோனா என கேள்விப்பட்டார். இதனால் அவர் பெரும் கவலையில் இருந்தார் என்று தெரிவித்தார்' எனக் குறிப்பிட் டுள்ளார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-இ)

## நவ.23ஆம் திகதியே...

வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பாடசாலைகளை இன்றையதினமே மீளத் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மாணவர்களின் சுகாதா ரர் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அதனை மேலும் இரு வாரங்களுக்கு பிற்போடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி நவம்பர் 23ஆம் திகதியே பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை ஆரம்பமாகும்.

இக்காலப்பகுதியில் மாணவர்களுக்கு 'ஒன்லைன்' மூலம் பாடங்கள் கற்பிக்கப்படும். தரம் 3 முதல் 13 தரம் வரையான மாணவர்களுக்கு தொலைக்காட்சிகள் ஊடாக மும்மொழி களிலும் காணொளிமூலம் பாடங்களைக் கற்கலாம். தொலைக் காட்சி வசதி, இணையத்தள வசதி இல்லாத மாணவர்களுக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வானொலி ஊடாக கற்பித்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்' என்றார்.(ம-44)

## தீப்பற்றியது...

தீக்கிரையாகியுள்ளன என்று சொல்லப்படு கின்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு தாவது:

செட்டிக்குளம் நகரில் அமைந்துள்ள குறித்த இரும்பகம் இன்று காலை 7 மணியளவில் திடீரென தீப்பற்றியுள்ளது. இதனை அவதா னித்த பொதுமக்கள் தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற் கொண்டதுடன் வவுனியா நகரசபை தீய ணைப்புப் பிரிவினருக்கும் தகவலை வழங்கி யிருந்தனர். இதையடுத்து தீ கட்டுப்படுத்தப் பட்டது. மின்னொழுக்குக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. மேலதிக விசார ணைகள் இடம்பெறுகின்றன. (ம18,ரி3)

## மீண்டும் சூடுபிடிக்கின்றது...

வாறு குறிப்பிட்டுள்ளார்.

மறக்கப்பட்ட தமிழ் கைதிகளை விடுதலை செய்யும் விவகாரம் தொடர்பில் அமைச்சர்களான நாமல் ராஜபக்ச விடம் யாழ்ப்பாணத்திலும், டக்ளஸ் தேவானந்தாவிடம் மட்டக்களப்பிலும் ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

தமிழ் கைதிகள் விவகாரம் குறித்து ஊடகங்களினால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாலும், நாடாளுமன்ற உறுப் பினர் சுரேன் ராகவன் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு கடிதம் எழுதியுள்ளதன் மூலமாகவும் தற்பொழுது அரசி யல் கைதிகளை விடுதலை செய்வது சூடுபிடிக்கிறது - என்று மனோ மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)

## மாஸ்க்கை மறந்த...

ரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின்' மற்று மொரு கூட்டம் நேற்றுத் திங் கட் கிழமை வவுனியா, மன் னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ள டக்கும் வகையில் வவுனியா மாவட்ட செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம். சார்ள்ஸ் முகக்கவசமின்றி கலந்து கொண்டிருந்தார். எனினும் சற்று நிமிடத்தில் தன் உதவியா ளரை அழைத்து முகக்கவ சத்தைப் பெற்று அணிந்து கொண்டார்.மக்களுக்கு முன்னு தாரணமாக செயற்பட வேண் டிய வடக்கு மாகாண ஆளுநரே இவ்வாறு நடந்து கொண்டிருந் தமை விசனத்தை ஏற்படுத்தியுள் ளது. (ம-18)

## கிராம அலுவலர் மீதான....

யாக மாறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

'எனது இரட்டைக் குழந்தைகளில் ஒன்றை தான் வளர்ப்பதற்குத் தருமாறு மனைவியிடம் (சந்தேக நபரின் மனைவியும் ஒரு கிராம அலுவலர்) நிர்வாக கிராம அலுவலகர் கேட்டு வந்துள்ளார். அதுதொடர் பில் எனக்கு எழுந்த சந்தேகம் அவரைக் கொலை செய்யுமளவுக்குத் தூண்டியது' என்று சந்தேக நபர் விசாரணையில் தெரிவித்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலகராகக் கடமையாற்றும் விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன் (வயது55) என்பவர் கொலை செய்யப்பட்டார். அவர் கடந்த 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியள வில் கடமை முடிந்து தனது வீடு நோக்கிச் சென்றுள் ளார். அதன்பின்னர் ஆத்திமோட்டை - கள்ளியடி யில் தலையில் பலத்த காயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந் தார்.

சம்பவம் தொடர்பில் இலுப்பக்கடவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். நேற்றுமுன் தினம் சந்தேகநபரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அவரது வீட்டில் வேலைக்காக தங்கியிருந்த இளை ஞனை அழைத்து வந்து விசாரணை செய்தனர். அந்த இளைஞன் நடந்தவற்றைக் கூறியதால் பெண் கிராம அலுவலகரின் கணவரை கைது செய்தனர். கொலைக்குப் பயன்படுத்திய மண்வெட்டிப் பிடி மற் றும் உடை ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. சம்பவ இடத்துக்கு மீட்கப்பட்ட குருதிக்கறை யுடனான மரத்துண்டு மண்வெட்டிப்பிடியில் உடைந்த பகுதியோடு பொருந்தியுள்ளது.

இந்த நிலையில் முதலாவதாகக் கைதுசெய்யப் பட்ட இளைஞன் அரச சாட்சியாக மாறுவதற்கு சம்மதித்ததால் சந்தேகநபருக்கு எதிரான வழக்கை விரைந்து முடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர். (ம-இ)

# கடல் ஊடுருவலாளர்களால் கொரோனா வந்திருக்கலாம்

## தீவிர விசாரணைகள் என்று இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, நவ. 9

இலங்கைக்குள் கொரோனா மீண்டும் தலையெடுப்பதற்கு சட்டவிரோத கடல் ஊடுருவலாளர்களே காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ள இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, இது தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனா வைரஸ் மீண்டும் தலையெடுப்பதற்கு சட்டவிரோத கடல் ஊடுருவலாளர்களே காரணமாக இருக்கலாம். இது தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அதேநேரம் சிலாபத்துக்கு வருகைதந்த உக்ரேன் விமானப் பணிக்குழு குறித்தும் விசாரிக்கப்படுகின்றது - என்றார். (ம-இ)

## கோத்தாபய, ஜி ஜின்பிங்...

டலில் இரு தலைவர்களும் நிர்வாக விடயங்களில் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

சபாநாயகர் மஹிந்தா யாப்பா அபேவர்தன, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ச, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் எம்.பி. சாகர கரியவாசம் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர் என்று அரச தரப்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச தொடர்புத் துறையின் தலைவர் சாங் தாவோ, ஹினான் மாகாணத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் லியு சிகுய் உள்ளிட்ட பல அதிகாரிகளும் சீனாவின் தரப்பில் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் பங்கேற்கவில்லை என சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது. எனினும் இரு தலைவர்களும் நெருங்கிய தொடர்புகளில் உள்ளனர் என்று தெரிவித்துள்ள தூதரகம், இன்னும் பல தொடர்புகளை எதிர்வரும் நாள்களில் எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளது. (எ-இ)

வவுனியாவில்

# வழமைக்கு திரும்பியது போக்குவரத்து சேவை

வவுனியா, நவ.9

வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து போக்குவரத்து சேவைகள் இன்று மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளன. ஊரடங்கு காரணமாக கடந்த 10 நாள்களாக வவுனியாவிலிருந்து வடமாகாணத்துக்குட்பட்ட பகுதிகளில் கட்டுப்படுத்தப்பட்ட பேருந்து சேவை மட்டும் இடம்பெற்று வந்ததுடன் மாகாணங்கிடையிலான பேருந்து சேவை முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் மேல் மாகாணத்தில் இன்று ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதால் வவுனியா மாவட்டத்தில் தடைப்பட்டிருந்த வடமாகாணம் உட்பட வெளி மாவட்டங்களுக்குரிய போக்குவரத்து சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன. எனினும் கொழும்பு , அக்கரைப்பற்று பகுதிகளுக்கான சேவைகள் தொடர்ந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும், புதிய பேருந்து நிலையத்துக்குள் செல்லும் பயணிகளும் கைகழுவுவதற்குரிய வசதிகள் பேருந்து நிலையத்தின் வாயிலில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் பணிகள் அனைவருக்கும் முகக்கவசமும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (வ-18)



# நெடுந்தூர பஸ் சேவைகள் இன்று மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, நவ.9

கொரோனா பரவல் அச்சுறுத்தலால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தூர இடங்களுக்கான பயணிகள் பேருந்து சேவைகள் இன்று தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. எனினும் தூர இடங்களுக்கான பேருந்துகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் நிறுத்தப்பட மாட்டாது என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபையின் அனைத்து குறுந்தூர பேருந்து சேவைகளும் இன்று முதல் ஆரம்பமாகியுள்ளன. மேலும் சுகாதார பாதுகாப்பு முறைமையைப் பின்பற்றி, இன்று முதல் அலுவலக தொடருந்து சேவைகள் இடம்பெறும் என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அந்த தொடருந்துகள் நிறுத்தப்படமாட்டாது என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

# ஹக்கீம், ரிஷாட்....

ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது தமது அனுமதியின்றியே 20க்கு ஆதரவாக கட்சி உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர் என ஹக்கீம், ரிஷாட் ஆகியோர் எம்மிடம் தெரிவித்தனர். ஆனால், ஹக்கீமுக்கு அறிவித்துவிட்டே வாக்களித்தோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரீஸ் கூறியுள்ளார். எது எப்படி இருந்தாலும் '20' ஐ ஆதரித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இந்த கட்சித் தலைவர்களும் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். அடுத்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கேள்வி எழுப்புவோம். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இருவரின் கட்சிகளுடனும் இணைந்து பயணிக்கமுடியாது. அதேபோல் ஹக்கீம், ரிஷாட் ஆகியோரின் “டபிள் கேமும்” வெளிச்சத்துக்கு வரும். என்றார். (எ-44)

# கொரோனா யுத்தத்தில் மக்களும் படைவீரர்களே

கொழும்பு, நவ.9

பொதுமக்களின் ஆதரவுடன் கொரோனா வைரஸைத் தோற்கடிக்கலாம் என சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் அனைத்து பொதுமக்களும் படைவீரர்களே என தெரிவித்துள்ள அவர் வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெற வைரஸைப் பரப்புவதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த நோக்கத்துக்காக பொதுமக்கள் முகக்கவசங்களை அணியவேண்டும், கைகளைக் கழுவவேண்டும், சமூக விலகலைப் பின்பற்றவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)





# காற்றில் பறந்தது தற்காலிக வீடு

## ஆட்டுக்கொட்டிலில் குடும்பம் தஞ்சம்

கிளிநொச்சி, நவ.9

காற்றில் தற்காலிக வீடு சேதமடைந்தமையால் ஆட்டுக்கொட்டிலில் தங்கும் நிலைக்கு குடும்பமொன்று தள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் பெரியபரந்தன் பகுதியில் வசிக்கின்ற விநாயகமூர்த்தி நித்தியானந்தன் என்பவர் மூன்று பிள்ளைகளுடன் தற்காலிக வீட்டில் வசித்து வந்துள்ளார். நேற்றிரவு பெய்த மழையுடன் கூடிய காற்று காரணமாக அவரது வீட்டின் கூரை காற்றினால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது காணியில் உள்ள ஆட்டுக்கொட்டிலில் அவர்கள் தங்கியுள்ளனர். அத்தோடு அப்பிரதேசத்தில் வேம்பு ஒன்று முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கிராம அலுவலர் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்துக்கு அவர்களது சேதமடைந்த வீட்டின் கூரையைத் திருத்துவதற்கு உடனடி உதவி தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-214)

# வீட்டிலுள்ள முதியவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## மருத்துவர் சுதத் சமரவீர கோரிக்கை




வீடுகளில் உள்ள வயதானவர்கள், நோயாளர்கள் போன்றோரை முடிந்த வரை பாதுகாப்பாக விலக்கி வைத்திருப்பது நல்லது என தொற்று நோய் பிரிவின் விசேட மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வயதானவர்கள், நோயாளர்கள் உரிய நேரத்தில் மாத்திரைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சத்தான உணவை தவறாமல் உண்ண வேண்டும். நாளொன்றுக்கு இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். நிம்மதியான உறக்கம் வேண்டும். இவற்றை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் ஊரடங்கு நீக்கப்படும் பிரதேசங்கள் பாதுகாப்பான பிரதேசமாக கருதமுடியாது. பல்வேறு நிறுவனங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில், பெரும்பாலானவர்கள், எவ்வித அறிகுறியும் இன்றி காணப்பட்டுள்ளனர்.

எனவே, உங்களுக்கு வரலாம். உங்களால் மற்றவர்களுக்கும் பரவலாம். கொரோனாத் தொற்று மரணத்தில் முடிவடையலாம் என்பதால், வீட்டிலேயே இருப்பது சிறந்தது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)




# தீப்பற்றிய படகு கரை சேர்ந்தது

கொழும்பு, நவ.9

தெற்கு கடற்பரப்பில் தீப் பற்றி எரிந்த மீன்பிடிப் படகு கடற்படையினரால் பாதுகாப்பாக கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அம்பலாங்கொடை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்காகச் சென்றிருந்த படகு ஒன்று கரைக்கு திரும்பும் வழியில் கொக்கல கடற்பரப்பில் வைத்து தீப்பற்றியது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தெற்கு கடற்படை கட்டளையகத்தின் கீழ் உள்ள ஆழ்கடல் ரோந்துப் படகு, மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தீயை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த அதிவிரைவு தாக்குதல் படகு தீப்பிடித்த படகினை பாதுகாப்பாக காலி மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டு வந்துள்ளது எ னவும் சம்பவத்தில் மீனவர் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லையெனவும் கடற்படை தெரிவித்துள்ளது. (வ-ரி4)



# வடக்கு கிழக்கில் இடியுடன் மழை

கொழும்பு, நவ.9

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. திணைக்களம் வெளியிட்டுள்ள காலநிலை அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஏனைய பிரதேசங்களில், மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 100மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் எனத் தெரிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# சிவில் பாதுகாப்புடன் இயங்கும் பொருளாதார மத்திய நிலையம்

கொழும்பு, நவ.9

மொத்த விற்பனைச் செயற்பாடுகள் இடம்பெறும் பொருளாதார மையங்களை மீளத் திறக்கும் தீர்மானத்துக்கு அமைவாக நாரஹென்பிட்ட பொருளாதார மத்திய நிலையத்தின் நாளாந்த பணிகள் சிவில் பாதுகாப்பு படையினரால் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சிவில் பாதுகாப்பு படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் (ஓய்வு) ஆனந்த பீரிஸின் வழிகாட்டலுக்கமைய சிவில் பாதுகப்பு படை வீரர்கள் நாளாந்த பணிகளை முன்னெடுத்தனர். கொரோனா பரவல் அச்சுறுத்தல் காரணமாக பொருளாதார வர்த்தக நிலையங்கள் அண்மையில் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி4)

# கலஹா பிரதேசத்தில் மேலும் ஒரு தொற்றாளர்

கண்டி, நவ.9

கண்டியிலுள்ள கலஹா பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாக்குள்ளான மேலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று கலஹாப் பிரதேச சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கலஹாப் பேரவத்தை பகுதியைச் சேர்ந்த சிறுவனுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான சிறுவன் சிகிச்சைகளுக்காக கம்பஹா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்வடைந்துள்ளது. (ற)



# கமலா ஹரிஸ் தெரிவு சிறந்த எடுத்துக்காட்டு

## மங்கள சமரவீர கருத்து

கொழும்பு, நவ.9

அமெரிக்காவின் உப ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் தெரிவு செய்யப்பட்டமை ஓர் எடுத்துக்காட்டாகும் எனத் தெரிவித்துள்ள முன்னாள்அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை மக்கள் எப்போது இனவாதம் மற்றும் மதவாதத்துக்கப்பால் தகுதி ,திறமை அடிப்படையில் ஒருவரைத் தலைவராகத் தெரிவுசெய்யப் போகின்றார்கள் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடனும் உபஜனாதிபதியாக கமலா ஹரிஸும் தெரிவாகியமைக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் வெளியிட்ட ருவிட்டர் பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# தவறான முடிவெடுத்து தாயும் மகளும் சாவு!

திருகோணமலை, நவ.9

திருகோணமலை - ஆனந்தபுரி பகுதியில் தாயும் மகளும் நஞ்சருந்திய நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சித்ததில் இவர்கள் இருவரும் உயிரிழந்தனர்.

இதில் என். நாகேஸ்வரி (வயது31) அவரது மகள் என். விதுரசிகா (வயது16) ஆகியோரே உயிரிழந்தனர்.

இவ்வாறு நஞ்சருந்திய தாய் உட்பட 4 பிள்ளைகள் கடந்த 6 ஆம் திகதி திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், இவர்கள் இருவரும் நேற்று உயிரிழந்தனர்.

இவர்கள் நஞ்சு அருந்தியமைக்கு குடும்பத் தகராறே காரணம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் குறித்து உப்பு வெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)

# அமெரிக்க ஆட்சி மாற்றம் முழு உலகுக்கும் சாதகமே

## எதிர்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால், ஒட்டு மொத்த உலகுக்கும் சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனாவினால் இன்று பலரது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழில்கள் முடங்கியுள்ளன. மீனவர்கள், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், தினமும் உழைப்பவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று ஒட்டுமொத்த நாடே பாதிக்கப்பட்டுள்ளது. இன்னமும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இதுதொடர்பாக எதிர்க்கட்சி என்ற வகையில், ஒட்டுமொத்த மக்களுக்காகவும் நாம் குரல் கொடுப்போம். அதேநேரம், தற்போது அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த நாட்டிலிருந்து இலங்கைக்குத் தேவையானவற்றை பெற்றுக கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் அரசைவிட, தற்போது அமையவுள்ள அரசால் உலகுக்கு சாதகமான நிலைமை ஏற்படும் என்றே நாம் நம்புகிறோம். அதை எமது நாடும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அமெரிக்காவின் இந்த ஆட்சி மாற்றத்திலிருந்து எமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து நன்மைகளையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். என்றார். (எ-இ)

# தபால் பரிமாறல் சேவை மீள ஆரம்பம்



கொழும்பு, நவ.9

கொழும்பு மத்திய தபால் பரிமாறல் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது ஊழியர்களை எழுந்தமானமாக பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்திய மூன்று சந்தர்ப்பங்களில் மூவர் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து எமது சேவைகளை முழுமையாக இடைநிறுத்துவதற்கு கடந்த 05 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

9 ஆம் திகதி (இன்று) ஊரடங்கு தளர்த்தப்படுவதைத் தொடர்ந்து கிருமி நீக்கத்துக்கு உட்படுத்தப்பட்டு மத்திய தபால் பரிமாறல் வரையறுக்கப்பட்ட சேவைகள் சிலவற்றுக்காக அலுவலகத்தைத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, சர்வதேச விரைவுத் தபால் சேவை, வர்த்தக தபால், உள்ளூர் விரைவுத் தபால் சேவை என்பவற்றுக்காக நவம்பர் மாதம் 9 ஆம் திகதி (இன்று) தொடக்கம் அலுவலகம் திறக்கப்படும்.

பதிவுத் தபால் பிரிவு தெரிவு நடவடிக்கைகளுக்காக செவ்வாய் (நாளை) திறப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் அரசாங்க அலுவலகங்களுக்கு பதிவு செய்யப்பட்ட தபால்களை விநியோகிக்கும் அலுவல்களை 11ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# யாசகருக்கு கொரோனா: நோயாளர் விடுதிக்கு பூட்டு

அநுராதபுரம், நவ.9

அநுராதபுரத்தில் யாசகர் ஒருவருக்கு கொரோ னாத் தொற்று ஏற்பட்டுள்ளதால் அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் நோயாளர் விடுதி ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று அந்த மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரவீர தெரிவித்துள்ளார்.

இங்கு அனுமதிக்கப்பட்ட அந்த யாசகருக்கு செய்யப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது, அவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, அவரை அனுமதித்த 17 ஆம் இலக்க நோயாளர் விடுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த யாசகர் கடந்த 20 நாள்களாக அநுராதபுரம் நகரைச் சுற்றித் திரிந்துள்ளார்.

எனவே, நகரிலுள்ளவர்கள் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இவருடன் தொடர்புடைய அநுராதபுரம் நகரின் பல இடங்களைச் சேர்ந்த 81 யாசகர்களை, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# அரசியல்வாதியின் ஆதரவாளர்கள் தாக்கியதாக பெண் முறைப்பாடு!

வத்தளை, நவ.9

வத்தளை - கெரவலப்பிட்டியப் பகுதியில் பிரதேச அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்கள் சிலர் தம்மைத் தாக்கினர் என பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். கெரவலப்பிட்டிய - தஹம் மாவத்தையில் வசிக்கும் இந்தப் பெண் நேற்று மாலை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தக் குழுவினர் ஏற்கனவே தமது காணியை அத்துமீறி அபகரிக்க முயற்சிகளை மேற்கொண்டனர் என்றும், இதற்கு இணங்க மறுத்ததால் தமது வீடு உடைக்கப்பட்டது என்றும் அது தொடர்பில் வத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் இந்தப் பெண் குறிப்பிட்டார். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததால் ஆத்திரமடைந்த குழுவினர் நேற்று மாலை தம்மைத் தாக்கினர் என பாதிக்கப்பட்ட பெண் மீண்டும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். .(ற-இ)

# தொற்றிலிருந்து மீண்டவர்களால் ஆபத்தில்லை



கொழும்பு, நவ.9

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களிடமிருந்து வைரஸ் பிறருக்குத் தொற்றுவதற்கான ஆபத்து இல்லை என்று தேசிய தொற்றுநோய் மருத்துவமனையின் மருத்துவர் ஆனந்த விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நபர் ஒருவர் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்பது இரு பிசிஆர் சோதனைகளின் பின் உறுதியானால் அவரை வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. நோய் அறிகுறி இல்லாதவர்கள் வைரஸை பரப்பமாட்டார்கள் என்பதால் அவர்களை பத்து நாட்களுக்கு மருத்துவமனையில் அனுமதிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 14 நாள்களுக்கு அவர்களைத் தனிமைப்படுத்துகின்றது. சமீபத்தில் கொரோனா வைரஸால் இறந்தவர்களில் அதிகளவானவர்கள் வயதானவர்கள். அவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டாலும் வேறு நோய்களாலேயே உயிரிழந்துள்ளனர். ஏற்கனவே ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ சிகிச்சையை முன்னெடுக்காவிட்டால் அவர்களின் நிலை மோசமடையலாம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# 10 நாள்களின் பின் ஊரடங்கு தளர்வு

## வழமைக்குத் திரும்பியது தலைநகர்

கொழும்பு, நவ.9

மேல் மாகாணத்தில் கடந்த 10 நாள்களாக நடைமுறைப்படுத்தப் பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்டுள்ளது. கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் நெடுஞ் சாலைகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து கொழும்பு நகர் வழமைக்கு திரும்பத் தொடங்கி யுள்ளது.

இருப்பினும், கொழும்பு, கம்பஹா, களுத்துறையில் பல பகுதி கள் தொடர்ந்தும் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன. அதன்படி, கொழும்பில் மட்டக்குளி, மோதரை, வாழைத்தோட்டம், கொட்டாஞ்சேனை, வெல்லம் பிட்டி, ஆட்டுப்பட்டித் தெரு, பொரளை, புளுமெண்டல், கரையோர பொலிஸ், மாளிகா வத்தை, தெமட்டகொடை, கிராண்ட் பாஸ் பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக உள்ளன.

மட்டக்குளியின் மெத்சந்த செவன, மிஹிஜயசெவன, மோத ரையின் ரண்முத்து செவன, கிராண்ட்பாஸின் முவதொர உயன, தெமட்டகொடையின் சிறிசந்த உயன, மாளிகாவத்தை யின் தேசிய வீடமைப்புத் திட்டம் போன்ற தொடர்மாடிகளிலிருந்து எவரும் வெளியே செல்லவோ, எவரும் உள்ளே வரவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கம்பஹா வில் வத்தளை, பேலியகொடை, கடவத்தை, ராகமை, நீர்கொழும்பு, பமுனுகம, ஜா எல, சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங் களாக இருக்கும். களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, இங்கிரிய பொலிஸ் பிரிவுகளும், வேக்கடை கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



## யாழ். நகரப் பகுதியில் மாஸ்க் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம் நுழைவாயில் லயன்ஸ் கழகம் மற்றும் நீர்கொழும்பு ஒரியன் லயன்ஸ் கழகம் இணைந்து யாழ்ப்பா ணம் நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் மக்களுக்கு முகக்கவசங்களை வழங் கின. யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம், நவீன சந்தைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, ஜும்மா ஒழுங்கை, கே.கே.எஸ்.வீதி ஆகியவற் றில் வர்த்தகர்களுக்கும், வீதிகளிலும், பஸ்களிலும் பயணித்த பொதுமக்களுக் கும் 2 ஆயிரத்து 300 முகக்கவசங்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தச் செயற்பாட்டில் லயன்ஸ் கழக அங்கத்தவர்களும், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய அதிகாரிகளும் பங்குகொண்டனர் என்று ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்தனர்.

## தலைமறைவாகிய பொலிஸை கைதுசெய்ய 10 குழுக்கள்

இரத்தினபுரி, நவ.9

இரத்தினபுரி குருவிட்ட காவல் நிலை யத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைத்துப்பாக் கியுடன் தலைமறைவாகிய நிலையில், அவரைக் கைதுசெய்வதற்கு 10 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட் டுள்ளன.

கடந்த 29 ஆம் திகதி சிரிபாகம பகுதியில் அவர் கடமையில் ஈடுபட் டுக்கொண்டிருந்தவேளை 9 பேரைக் கொலை செய்யவுள்ளேன் எனத் தெரிவித்து தலைமறைவாகியுள்ளார்.

அவர் தலைமறைவாகி 12 நாள்கள் கடந்துள்ளபோதிலும் அவர் தொடர் பில் எந்தவித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படு கிறது. (ற-இ)

## சுகாதார நடைமுறைகள் இன்று முதல் நாடு முழுவதும் கண்காணிக்கப்படும்

### அஜித் ரோஹன எச்சரிக்கை

கொழும்பு, நவ.9



சுகாதார வழிகாட்டல் களை மீறுவோர் இன்று தொடக்கம் கைது செய்யப்படுவார்கள். அதற்கான சுற்றி வளைப் புக்கள் இன்று தொடக் கம் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது,

கடந்த ஒக்ரோபர் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தலின்படி, இந்த நடவடிக்கைகள் மிகக் கண்டிப்பாக பின்பற்றப்படும். நாட்டில் எந்த பிரதேசத்தில் இருந்தாலும் ஒருவர் வீட்டைவிட்டு வெளியேறும்போது, முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி தொடர்பாக மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கடந்த 8 நாள்களில் மட்டும் முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை தொடர்பாக 125 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்று முதல் மிக கண்டிப்பு டன் நாடளாவிய ரீதியில் இந்த கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (வ-இ)

## ஆடைத் தொழிற்சாலைகளில் 1,600 பேருக்குத் தொற்று

கொழும்பு, நவ.9

நாடளாவிய ரீதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் சுமார் ஆயிரத்துக் கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில், மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஆயிரத்து 600க்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள் ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள் ளன. ஆடைத்தொழிற்சாலை உரிமை யாளர்களால் 246 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, கடந்த ஒக்ரோபர் 8ஆம் திகதி முதல் நவம்பர் 4ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளிலேயே ஆயிரத்து 632 கொரோனா தொற்றா ளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தெரிய வந்துள்ளது. முதலீட்டு வலயத் தில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக ளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 460 தொற்றாளர் கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் 438 பேர் கட்டுநாயக்க சுதந்திர வர்த் தக வலயத்தில் உள்ள ஆடைத்தொழிற் சாலைகளில் பணிபுரிபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## புற்று நோயாளர்களுக்கு விசேட வேலைத்திட்டம்!!

கொழும்பு, நவ.9

புற்று நோயாளர்களுக்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய புற்று நோயாளர்கள் மஹரகம வில் அமைந்துள்ள அபெக் ஷா மருத்துவமனைக்கு சிகிச்சைகளுக்காக வருகை தர வேண்டாம் எனவும் மருந்துக ளைப் பெற்றுக்கொடுக்க விசேட வேலைதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. நோயாளர்களுக்கு மருந்துகளை தபால் திணைக் களத்தின் ஊடாக வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவ தாக மருத்துவர் பிரியந்த அத்தபத்து மேலும் தெரிவித் துள்ளார். (ற-இ)

## சட்டவிரோத தடுப்பில் வைத்த அதிகாரிகளுக்குத் தண்டனை

### சொந்தப் பணத்தில் இழப்பீடு செலுத்துமாறு மன்று கட்டளை

கொழும்பு, நவ.9

சட்டவிரோதமாக ஒருவரைத் தடுத்து வைத்த விவகாரத்தில் ஹெட்டிபொல பொலிஸ் நிலை யத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி மற்றும் குற்றப்பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோர் தங்க ளது சொந்தப் பணத்திலிருந்து இழப்பீடு வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருவரும் தலா 50,000 ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும்



என்று நீதிமன்று உத்தரவிட்டுள் ளது.

இராணுவத்திலிருந்து சட்டபூர்வ மாக விலகிய ஒருவரை, இராணுவத் திலிருந்து தப்பியோடியவர் என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்து, மனிதாபிமானமற்ற முறை யில் தாக்கி, தடுத்து வைத்த விவகா ரத்தில், பொலிஸ் அதிகாரிகள் இரு வரும் தவறிழைத்துள்ளனர் என்று உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. இந்த இராணுவச் சிப்பாய் 2011ஆம் ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி ஹெட் டிபொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, ஐந்து மாதங்களுக் கும் மேலாக காவலில் வைக்கப்பட் டிருந்தார். (எ-இ)

# உருவெடுக்கின்றது உண்ணிக் காய்ச்சல்

## அவதானமாகச் செயற்பட வேண்டுமென மருத்துவர் யமுனாநந்தா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ.9



தற்போது உண்ணிக் காய்ச்சல் பரவல் அவதானிக்கப்பட்டுள்ளது. உண்ணிக் காய்ச்சல் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

தற்போது காய்ச்சலுடன் பலர் மருத்துவமனை வருகின்றனர். பொதுவாக வைரஸ் காய்ச்சல் எமது பிரதேசத்தில் காணப்படலாம். தற்போது டெங்குக் தொற்று ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன. எலிக்காய்ச்சல், காச நோய்க்குரிய காய்ச்சல் என்பனவும் உள்ளன. இவற்றைவிட உண்ணிக் காய்ச்சல் என்ற பக்றீரியா காய்ச்சலும் காணப்படுகின்றது.

உண்ணிக் காய்ச்சல் தற்போது அதிகளவில் காணப்படுகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பருவ காலங்களில் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பர். வயல், தோட்ட வேலைகள் செய்பவர்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இது ஒருவகைத் தெள்ளால் பரப்பப்படுகின்றது. பொதுவாக எலி, அணில், நாய், பூனை என்பவற்றில் இது காணப்படலாம். காய்ச்சல், உடல் நோ என்பன அறிகுறிகளாகக் காணப்படும். நோயை இனங்கண்டு உடனடியாகச் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மிருகங்களோடு பழகுபவர்களுக்குத் தொற்று ஏற்படுவது சாதாரணம். தெள்ளுக் கடித்த இடத்தில் காயம் ஏற்படுமாயின் அதனூடாகக் கிருமி உட்புகுகின்றது. இந்தக் காய்ச்சலை உடனடியாக இனங்காணாவிட்டால் உயிரிழப்பு வரை செல்லக்கூடும். இந்த நோய்க் கிருமிக்கான சிகிச்சை இலகுவானது. எதிர்ப்பு மருந்தின் மூலம் கட்டுப்படுத்தலாம். அதனால் அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உடல் சுத்தம் முக்கியமானது. வயல், தோட்ட வேலைகள் செய்பவர்கள் வேலை முடிந்ததும் குளித்தல் அவசியம். ஆடைகளைத் தினமும் துவைத்துப் பாவிப்பதன் ஊடாகவும் கிருமித் தொற்றைத் தடுக்கலாம்.

உண்ணிக் காய்ச்சலை அடையாளம் காணாது விடுவதால் அது உயிரிழப்பையும் ஏற்படுத்தக்கூடும். அதனால் இது தொடர்பாக விழிப்புணர்வுடன் இருந்தல் அவசியம். என்றார். (எ-111)

# ஊரடங்கை மீறிய 2,923 பேர் கைது!

கொழும்பு, நவ.9

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 91 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதன்போது 12 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 2,923 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், 438 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-இ)

# காட்டு யானை தாக்கி குடும்பத்தலைவர் சாவு

மட்டக்களப்பு, நவ.9

மட்டக்களப்பு, அலியா ஓடை வயற் பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு நடந்துள்ளது. சந்திவெளி கிராமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான காந்தமுத்து ஏரம்பமூர்த்தி (வயது44) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று கரடியனாறுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வழமைபோன்று வயல் காவலில் ஈடுபட்டிருந்தபோது காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இவரது உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கரடினயாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-46)



# குருதிக் கொடைக்கு அஞ்ச வேண்டாம்!

## தொற்று நோயியல் பிரிவின் பிரதானி சுதத் சமரவீர அறிவிப்பு

கொழும்பு,நவ.9

குருதித் தானம் செய்வதற்கு அஞ்ச வேண்டிய அவசியமில்லை என்று தொற்று நோயியல் பிரிவின் பிரதானி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குருதித் தானத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற குருதியை நோயாளி ஒருவருக்கு ஏற்றியதால் கொவிட்19 நோய்த் தொற்று ஏற் பட்டது என்று இதுவரையில் எந்தவொரு நாட்டிலும் தகவல்கள் வெளியாகவில்லை எனவே குருதிக் கொடை செய்வதற்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நோய்த் தொற்று நிலைமை காணப்படும் போது குருதித் தானம் செய்வதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், குருதி தானம் செய்விலும் சிரமங்கள் ஏற்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள், நோய்த் தொற்று ஏற்பட்டவர்களிடமிருந்து குருதியைப் பெற்றுக் கொள்ளமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)

# களுத்துறையில் 654 பேருக்கு கொரோனாத் தொற்று!

களுத்துறை, நவ.9

களுத்துறை மாவட்டத்தின் 15 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் 654 கொரோனாத் தொற்றாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று களுத்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உதயரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தொற்றாளர்களுள் 3 கர்ப்பிணிகளும் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்ட நால்வரும் உள்ளடங்குகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ஹொரனை 88, அகலவத்த 19, பண்டாரகம 63, புளத்சிங்கள 30, தொடங்கொட 2, பேருவளை 69, இங்கிரிய 69, களுத்துறை 52, மதுராவல 29, மத்தகம 66, மில்லனிய 26, பாலிந்தநுவர 9, பாணந்துறை 62, வாதுவ 48, வலலாவிட்ட 22 ஆகிய 15 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 654 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

# மிஹிந்தலையில் புதிய தேசிய பொருளாதார மத்திய நிலையம்

அநுராதபுரம், நவ.9

அநுராதபுரம் மிஹிந்தலை பகுதியில் தேசிய பொருளாதார மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மிஹிந்தலை பகுதிக்கான கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மொத்த விற்பனை நிலையம் திடீரென மூடப்பட்டாலும், பொதுமக்களுக்கான பொருள்களை இங்கிருந்து விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்படாது எனவே இதனை நிர்மாணிக்கவுள்ளோம் என அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 10 மாவட்டங்களுக்கான பிரதான பொருளாதார மத்திய நிலையமாக இது அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

மல்லாவி, நவ.9

மல்லாவி துணுக்காய் பகுதியில் சட்டவிரோத துப்பாக்கியுடன் இளைஞர் (வயது17) ஒருவர் நேற்று இரவு மல்லாவி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து சட்டவிரோத துப்பாக்கி மீட்கப்பட்டதுடன், இந்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மல்லாவி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ற-19)

# தொடர்ந்தும் போராடுவேன் அடம்பிடிக்கின்றார் ட்ரம்ப்!

வொஷிங்டன், நவ. 9

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவேன் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளின்படி வெற்றிபெறுவதற்கு தேவையான தேர்தல் தொகுதிகளை ஜோ பைடன் கைப்பற்றியுள்ளார்.

எனினும் குறுகிய இடைவெளியில் போட்டி இருந்து வந்த ஜோர்ஜியாவில் வாக்குகள் மீண்டும் எண்ணப்படவிருப்பதோடு விஸ்கோன்சினிலும் வாக்குகளை மீண்டும் எண்ணும் முயற்சியில் ட்ரம்ப் தரப்பு ஈடுபட்டுள்ளது. தேர்தல் மோசடிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போகிறேன் எனவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறான குற்றச்சாட்டை நிரூபிக்க அவர் இதுவரை எந்த ஆதாரமும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## ஆள்துளைக் கிணறால் மற்றொரு உயிர் காவு

புதுடில்லி, நவ. 9

இந்தியா மத்திய பிரதேச மாநிலத்தில் 200 அடி ஆழ் துளைக் கிணற்றில் விழுந்த 5 வயது சிறுவன் 3 நாள்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

3 நாள்களாக இரவு பகலாக மீட்பு போராட்டத்தில் இராணுவ வீரர்கள் மற்றும் மாநில மீட்பு குழுவினர் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணிக்கு சிறுவனை வெளியே எடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது சிறுவன் உயிரிழந்து விட்டான் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (வ-இ)



## பொலிவியாவின் ஜனாதிபதியாக லூயிஸ் ஆர்ஸ்

பொலிவியாவில் அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் சோசலிசக் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. இதனையடுத்து அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாக லூயிஸ் ஆர்ஸ் நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக பதவியேற்றுக் கொண்டார். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஆர்ஜென்டினா, பராகுவே, கொலம்பியா, மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும், சிலி, ஈரான் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளின் மூத்த அதிகாரிகளும் பங்கேற்றனர் என்பதும் குறிப்பி டத்தக்கது. (வ-இ)

## தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள்

### ட்ரம்புக்கு மெலனியா ஆலோசனை

வொஷிங்டன், நவ. 9

தேர்தல் தோல்வியை ஒப்புக்கொள்ளுமாறு தனது கணவர் டொனால்ட் ட்ரம்பிற்கு, அமெரிக்காவின் முதல் பெண்மணி மெலனியா ட்ரம்ப் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேர்தல் தொடர்பில் மெலனியா பகிரங்கமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்றாலும், அவர் தனது கருத்தை தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளார் என சி.என்.என் செய்திச் சேவை சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)





## உலகப் படகுப் போட்டி ஆரம்பம்

பரிஸ், நவ. 9

நடப்பாண்டுக்கான வெண்டி குளோப் உலகப் படகுப் போட்டி, பிரான்ஸில் விமானங்களின் கண்கவர் சாகசங்களுக்கு மத்தியில் நேற்றைய தினம் ஆரம்பமானது.

லெஸ் சேபிள்ஸ் டி ஒலோனி நகரையொட்டி கடல்பகுதியில் இப் படகுப் போட்டியானது ஆரம்பிக்கப்பட்டதுடன் இதில் பங்குபற்றிய வீரர்களுக்கு முன்னரே கொரோனாத் தொற்றுப் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. இப் போட்டியில் 6 பெண்கள் உட்பட 33 வீர வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். (வ-இ)

## இந்தியாவில் கொரோனா 85 லட்சத்தைக் கடந்தது

புதுடில்லி, நவ. 9

இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 85 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிவரும் நிலையில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. 79 லட்சத்து 17 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தகவலை வெளியிட்டுள்ளன. இன்று காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் 85 இலட்சத்து 53 ஆயிரத்து 657 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 79 இலட்சத்து 17 ஆயிரத்து 373 பேர் குணமடைந்துள்ளனர், 5 இலட்சத்து 09 ஆயிரத்து 673 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை கொரோனா வைரஸால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்து 26 ஆயிரத்து 611ஆக உயர்ந்துள்ளது. (வ-இ)

## கொரோனாவை எதிர்த்து போராடுவதற்கு வருக!

### உலக சுகாதார அமைப்பு பைடனுக்கு அழைப்பு

ஜெனிவா, நவ. 9

கொரோனாத் தொற்றை எதிர்த்துப் போராட வருமாறு அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ஜோ பைடனுக்கு உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜோ பைடன் மற்றும் கமலா ஹரிஸ் ஆகியோருக்கு வாழ்த்துத் தெரிவித்தபோதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான கூட்டுப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைக்



குறிப்பிட்டு, உலக சுகாதார ஸ்தாபனம் ஜோபைடன் மற்றும் கமலா ஹரிஸ் ஆகியோருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் அதிகாரபூர்வ முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை, ஆனால் அனைத்து முக்கிய அமெரிக்க ஊடகங்களும் பைடனை வெற்றியாளராக அறிவித்துள்ளன.

பைடனின் தேர்தல் வெற்றிக்கு பல உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)